பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
# VALAMPURI

லாலா
அதிஸ்டம
லாலாசோப் சன்சயின்சோப்
பாவிக்கும்போது ஒரு
பொருள் தென்படும்
அதற்கு ஒரு லேடிஸ்
குடை இனாம்
லாலாசோப்
தொழிற்சாலை, அச்சுவேலி.
(கி 899)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 11 வெள்ளிக்கிழமை (27-10-2000) தொ. பேசி 3378 ஒலி: 312

## தமிழ் இளைஞர்களின்படுகொலையை அடுத்து
# பண்டாரவளையில் பதற்றம்
# கொழும்பில்தீவிர பாதுகாப்பு!

### காயமடைந்தவர்கள் இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றம்

(கொழும்பு விசேட நிருபர்)

பண்டாரவளையிலுள்ள பிந்துலோயா புனர்வாழ்வு நிலையத்தில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதை பண்டார வளைப் பகுதியிலும், கொழும்பு நகரின் முக்கிய கேந்திர நிலை யங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்தையடுத்து அதன் பின்னணி தொடர்பான பூரண விசா ரணைகளை மேற் கொள்வதற்கு சுமார் பத்து குற்றப்புலனாய்வுக் குழுவினர் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தில் காய மடைந்து பதுளை, பண்டார வளை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவந்த இளை ஞர்கள் தற்பொழுது தியத் தலாவை இராணுவவைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ள னர்.

இவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பத்தி ரிகையாளர்கள் உண்மை நிலையினை வெளிக்கொண்டு வந்து விடுவார்கள் என்ற அச்சத்தின் பேரிலேயே இவர் கள் இராணுவ வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதக தெரி விக்கப்படுகிறது.

பண்டாரவளைப் பகுயில் பதட்டமான சூழ்நிலை நிலவு

(8ம் பக்கம் பார்க்க)

### வைத்தியசாலையில் சிகிச்சைபெறுவோர்விபரம்

வைத்திய சாலையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சையின் பின் உடல் நிலை தேறிவரும் பதின்நான்கு பேரின் விபரம் வருமாறு.

● அடைக்கலநாதன் இரா மச்சந்திரன் (வவுனியா)
● தம்பிராசா தவராசா (செட்டிக்குளம்)
● கணேசமூர்த்தி அசோ கன் (திருகோணமலை)

( 8ஆம் பக்கம் பார்க்க)

### அவசர சிகிச்சை பெறும் 11 பேரின் விபரம்

(கொழும்பு)

பண்டாரவளை புனர் வாழ்வு முகாமில் இடம் பெற்ற தாக்குதலின் பேரது வெட்டுக் காயங்களுக்கு ஆளாகி படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் டுள்ள பதினொரு பேரின் விப ரங்கள் வருமாறு.

● அழகுதுனர புஸ்பராசா

(8ஆம் பக்கம் பார்க்க)

### அமைதிப் பேரணி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலரா ஜன் படுகொலையை கண் டித்து நாளை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தி னால் ஏற்பாடு செய்திருந்த மௌன அமைதிப் பேரணி தவிர்க்க முடியாத காரணங் களால் ஒத்திவைக்கப்பட்டுள் ளது.

பேரணி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென சங்கத்தின் தலைவர் கதிர்கா மத்தம்பி தெரிவித்துள்ளார்.

### வீதிவிபத்தில் 4பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

தீபாவளி தினமான நேற்று இடம்பெற்ற வீதிவிபத் துக்களில் சிக்கி நால்வர் காய மடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

இவர்களில் பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த நடராசா. ஞானசேகரம் (வயது 26) லொறிவிபத்தில் படுகாயமடைந்துஅவசர சிகி ற்சைப் பிரிவில் ஆபத்தான

(8ம்பக்கம்பார்க்க)

### கைதிகளின் கொலைக்கு புலிகளின்குரல் கண்டனம்

(வவுனியா)

பண்டாரவளைபிந்து லோயா புனர்வாழ்வு நிலை யத்தில் கோரமாக தமிழ் இளைஞர்கள்வெட்டிக்கொல லப்பட்ட சம்பவத்தை புலி களின் வானொலி வன்மையா கக் கண்டித்துள்ளது.

நேற்று முன்தினம் அதிகா லை பண்டாரவளையில் சிங்கள குண்டர்களினால் தமிழ் இளைஞர்கள் கோர மான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டும் படுகாயங் களுக்கு உள்ளானதும் தெரிந் ததே. (வ)

### தமிழ் கைதிகளின்கொலை அரசியல்தீர்வுக்குவழியல்ல அமைச்சர்டக்ளஸ்கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை புனர் வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் மீது நேற்று முன் தினம் நடத்தப்பட்ட கோரத் தனமான தாக்குதலானது தமிழ் பேசும் மக்களின்நீண்ட காலப் பிரச்சினைக்கு ஜன நாயக ரீதியில் தீர்வு காணும் முயற்சிகளுக்கு பெரும்

(8ம் பக்கம் பார்க்கக

### பண்டாரவளைபடுகொலை மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை புனர் வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அப்பா வித் தமிழ் இளைஞர்கள் மிகவும் கொடூரமான முறை யில் படுகொலை செய்யப் பட்டுள்ளமையானது சிங்களப் பேரினவாதத்தின் காட்டு மிராண்டித் தனத்தை மீண்டு மொருமுறை உலகிற்கு

(8ம் பக்கம் பார்க்க)

### படு கொலைக்கு நகரசபை கண்டனம்!

வாழ்வு முகாமில் இடம் பெற்ற தாக்குதலின் பேரது வெட்டுக் காயங்களுக்கு ஆளாக் படுகாயமடைந்த

டுள்ள பதினொரு பேரின் விபரங்கள் வருமாறு.

● அழகுதுனர புஸ்பராசா

(8ஆம் பக்கம் பார்க்க)

பேரணி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென சங்கத்தின் தலைவர் கதிர்காமத்தம்பி தெரிவித்துள்ளார்.

# 13 சடலங்கள் இனங்காணப்பட்டது

[கொழும்பு]

நேற்று முன்தினம் பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் காடையர்களால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட 25 தமிழ் இளைஞர்களில் 13 சடலங்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளது.

இனங்காணப்பட்டவர்களின் பெயர் விபரம் வரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## துக்கம் அனுஸ்டிப்பு

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற தமிழ் இளைஞர்களின் படுகொலைக்கு ஆட்சேபம் தெரிவித்தும், அனுதாபம் தெரிவித்தும் திருமலை மக்கள் தமது வீடுகள், வர்த்தக நிலையங்களில் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு, துக்கத்தை அனுஷ்டித்து வருகின்றனர்.

# யாழ்-குடா நாடு முழுவதும்

# நாளைபூரண 'துக்கம்' அனுஷ்ட்டிப்பு

## ஈ. பி. டி. பி அமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை படுகொலையைக் கண்டித்து நாளை சனிக்கிழமை யாழ் குடாநாடு பூராகவும் 'துக்கதினம்' அனுஷ்டிப்பதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எற்பாடு செய்துள்ளது.

தமிழ் இளைஞர்களின் படுகொலையைக் கண்டிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத் துக்கதினத்தன்று பொது ஸ்தபானங்கள் வர்த்தகநிலையங்கள் அரச, தனியார் நிறுவனங்கள் தங்களுடைய ஸ்தாபனங்களை மூடியும், போக்குவரத்து சங்கங்கள் போக்குவரத்து சேவையினை இடைநிறுத்தியும் ஒத்துழைப்பு தருமாறு சம்பந்தப்பட்டவர்களை ஈ.பி.டி.பி அமைப்பு கேட்டுள்ளது.

இத்துடன் தமிழ் இனத்தின் சக்தியை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டவும், தமிழ்

(8ம் பக்கம் பார்க்க)

# படு கொலைக்கு நகரசபை கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளஞர்களை படுகொலை செய்யப்பட்டுள்ளமையானது தமிழ் மக்களின் வாழ்வைக்கேள்விக் குறியாக்கியுள்ளது.

இவ்வாறு பண்டாரவளைப் படுகொலை குறித்துசாவகச்

(8ம் பக்கம் பார்க்க)

# சக்திவாய்ந்த இரு குண்டுகள் வவுனியாவில் மீட்பு

(வவுனியா)

வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகில் ரயில் பாதையில் சக்தி வாய்ந்த இரு கிளைமோர் குண்டுகள் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரயில் கடவைக்கு வடக்கே

(8ம் பக்கம் பார்க்க)

# 25 இளைஞர்கள் கொலை இதுவரை300 பேர்விசாரணை

(கொழும்பு)

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் நேற்று முன்தினம் இடம் பெற்ற படுகொலை தொடர்பாக சுமார் 300க்கும் அதிகமானோர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்படுள்ளனர்.

இப் படுகொலையுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையில் பண்டாரவளை பொலிசார் ஈடுபட்டுள்ளதுடன் பிரதிப்பொலிஸ்மா அதிபர் குமாரசிறியின் தலைமையில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளான லக்ஷ்மன் செனிவரத்கின, கே. என். பிரேமரத்தின ஆகியோா தீவிர விசாரணைகளையும் மேற்கொண்டு வருகிறனன்ர்.

(ந-4)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயணஅனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின பதிவு இலக்கங்கள பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.


## சிறு விளம்பரம

சீமெந்துக் கூரை ஓடுகள் (LMCRS)

லோகேஸ் கூரை ஒட்டுத் தொழிற்சாலை (இணுவில்)

ஜீ. ரீ. சற. அரசசார்பற்ற நிறுவனங்களால் புனரமைப்பு செய்யப்படும். வீட்டுத் திட்டங்கள், பாடசாலை கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சீமெந்துக்கூரை ஓடுகள், முகட்டோடுகள விற்பனைக்குண்டு.

இயந்திரம்மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு. தொழிற்சாலையும் விற்பனை நிலையமும் லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை இணுவில்.

(1832)


### சங்கானை

| | |
|---|---|
| 141344 ஏ | 158707 ஏ |
| 158707 பி | 158707 சி |
| 158707 டி | 163890 ஏ |
| 163890 பி | 163890 சி |
| 163890 டி | 163890 ஈ |
| 165514 ஏ | 165514 பி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 159300 ஏ | 159300 பி |
| 163519 ஏ | 163519 பி |
| 166336 ஏ | 166381 ஏ |
| 166420 ஏ | 168300 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 151908 ஏ | 151908 பி |
| 158627 ஏ | 158627 பி |
| 158627 சி | 164227 ஏ |
| 164345 ஏ | 165578 ஏ |
| 166603 ஏ | 166824 ஏ |
| 166824 பி | 163479 ஏ |
| 166292 ஏ | 168463 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 161823 ஏ | 161823 பி |
| 1618 0 ஏ | 161890 பி |
| 161890 சி | 164291 ஏ |
| 164291 பி | 165694 ஏ |
| 165704 ஏ | 165704 பி |
| 165920 ஏ | 165920 பி |
| 166826 ஏ | 166826 பி |
| 166826 சி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 164196 ஏ | 165608 ஏ |
| 165748 ஏ | 166776 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 150797 ஏ | 160611 ஏ |
| 160611 பி | 161709 ஏ |
| 161709 பி | 161709 சி |
| 165445 ஏ | 165445 பி |
| 165505 ஏ | 165505 பி |
| 165505 சி | 165546 ஏ |
| 165546 பி | 165651 ஏ |
| 165657 ஏ | 165657 பி |
| 165657 சி | 165749 ஏ |
| 165749 பி | 165749 சி |
| 165766 ஏ | 165766 பி |
| 165784 ஏ | 165784 ஏ |
| 165784 பி | 165784 சி |
| 166608 ஏ | 166782 ஏ |
| 166787 ஏ | 166841 ஏ |
| 166841 பி | 166841 சி |
| 166844 ஏ | 166844 பி |
| 166844 சி | 166844 டி |

ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவி இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 147069 பி | 151845 ஏ |
| 158597 ஏ | 158597 பி |
| 158597 சி | 158597 டி |
| 158597 ஈ | 165699 ஏ |
| 165699 பி | 165696 சி |
| 165699 டி | 165785 ஏ |
| 165836 ஏ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 162567 ஏ | 162567 பி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 128754 ஏ | 159005 ஏ |
| 150005 பி | 161302 ஏ |
| 161302 பி | 161302 சி |
| 163269 ஏ | 163269 பி |
| 163426 ஏ | 163426 பி |
| 163456 ஏ | 163456 பி |
| 163456 சி | 163456 டி |
| 163456 ஈ | 163456எவ் |
| 163456 ஜி | 163464 ஏ |
| 163465 ஏ | 163610 ஏ |
| 166078 ஏ | 166078 பி |
| 166078 சி | 166079 ஏ |
| 166082 ஏ | 166082 பி |
| 166093 ஏ | 166131 ஏ |
| 166132 ஏ | 166144 ஏ |
| 166145 ஏ | 166145 பி |
| 166151 ஏ | 166154 ஏ |
| 166154 பி | 166209 ஏ |
| 166266 ஏ | 166266 பி |
| 168445 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 136598 ஏ | 136598 பி |
| 149196 ஏ | 149196 பி |
| 149645 ஏ | 149645 பி |
| 149700 ஏ | 149700 பி |
| 149738 ஏ | 149760 ஏ |
| 149760 பி | 154330 ஏ |
| 154493 ஏ | 154493 ஏ |
| | 159548 ஏ |

| | |
|---|---|
| 167041 பி | 167042 ஏ |
| 167042 பி | 167043 ஏ |
| 167043 பி | 167043 சி |
| 157056 ஏ | 167056 பி |
| 167056 சி | 167062 ஏ |
| 167062 பி | 167062 சி |
| 167062 டி | 166099 ஏ |
| 166099 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 155137 ஏ | 155137 பி |
| 155179 ஏ | 155179 பி |
| 155179 சி | 156033 ஏ |
| 156033 பி | 156033 சி |
| 164306 ஏ | 164306 பி |
| 164306 சி | 164307 ஏ |
| 164307 பி | 164307 சி |
| 164307 டி | 164333 ஏ |
| 165921 ஏ | 165921 பி |
| 165921 சி | 166748 ஏ |
| 156992 ஏ | 156992 பி |
| 156992 சி | 150067 ஏ |
| 150 67 பி | 150067 சி |
| 152984 ஏ | 152984 பி |
| 152984 சி | 152984 டி |
| 152984 ஈ | 161179 ஏ |
| 161179 பி | 161430 ஏ |
| 161430 பி | 161430 சி |
| 163575 ஏ | 163616 ஏ |
| 163617 ஏ | 163617 பி |
| 166137 ஏ | 166137 பி |
| 166137 சி | 166137 டி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 143844 ஏ | 143844 பி |
| 143844 சி | 151912 ஏ |
| 160659 ஏ | 160659 பி |
| 160659 சி | 160659 டி |
| 161843 ஏ | 164060 ஏ |
| 164280 ஏ | 164280 பி |
| 165524 ஏ | 165633 ஏ |

| | |
|---|---|
| 165821 ஏ | 165821 பி |
| 165821 சி | 165821 டி |
| 165826 ஏ | 165887 ஏ |
| 165887 பி | 165890 ஏ |
| 165890 பி | 166465 ஏ |
| 166465 பி | 166465 சி |
| 166465 டி | 166465 ஈ |
| 166658 ஏ | 166888 ஏ |
| 166860 ஏ | 166860 பி |

### தெல்லிப்பளை

| | |
|---|---|
| 163926 ஏ | 163216 ஏ |
| 165653 ஏ | 165653 பி |
| 165746 ஏ | 166519 ஏ |
| 166519 பி | 166750 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 147069 ஏ | 147069 சி |
| 150343 ஏ | 161687 ஏ |
| 161688 ஏ | 161808 ஏ |
| 161808 பி | 163959 ஏ |
| 163959 பி | 165549 ஏ |
| 165 49 பி | 165651 ஏ |
| 165651 பி | 165651 சி |
| 165651 டி | 165710 ஏ |
| 165710 பி | 165710 சி |
| 165716 ஏ | 165783 ஏ |
| 165805 ஏ | 165805 பி |
| 165805 சி | 165805 டி |
| 165841 ஏ | 165853 ஏ |
| 165906 ஏ | 165906 பி |
| 165906 சி | 165906 டி |
| 166513 ஏ | 166526 ஏ |
| 166526 பி | 166667 ஏ |
| 166736 ஏ | 166736 பி |
| 166736 சி | 166736 டி |
| 166788 ஏ | 166903 ஏ |

## விசேடப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வரைவற்ற கொட்டடி மத்தி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க விசேடப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யா. கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு சங்கத்தலைவர் சு. தில்லையம்பலம் தலைமைதாங்குகிறார்.

(செ-12)

## கந்தசஷ்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். திருவண்ணைநகர் அருள்மிகு செந்தில் கதிர் வேலாயுத சுவாமி ஆலய கந்த சஷ்டிவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமைவரை நடைபெறவுள்ளது.

விழாக்காலங்களில் தினமும் ஸ்கந்தசஷ்டி விரிவுரையை டாக்டர் க. நவரத்தினம்மும் 'முருகன் பெருமை' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ கு. சிவராஜ சர்மாவும் சொற்பொழிவு ஆற்றவுள்ளனர்.

(செ)


இலவசம் **நெடுந்தீவில்** இலவசம்

நெடுந்தீவு வாழ்மக்களின் சரீர, பண்பாட்டு, நிதி உதவியுடனும்
கலாசாரசபையின் அனுசரணையுடனும்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர்

செல்லையா மெற்றாஸ்மயிலின் தயாரிப்பில் உருவான

# "வேழம்படுத்த வீராங்கனை"

(ஆட்டநாட்டுக்கூத்து)
24வது மேடையேறுகிறது.

இடம்: நெடுந்தீவு மகாவித்தியாலயம்
காலம்: 29-10-2000 ஞாயிற்றுக்கிழமை 8-30 மணி

தலைவர்: புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் (தலைவர், பிரதேசசபை, நெடுந்தீவு)

முதன்மை விருந்தினர்: அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் (பேராயர், தென் இந்திய திருச்சபை, யாழ். ஆதினம்)

ஆசியுரை:-
1. பிரம்மஸ்ரீ கா. புவனேந்திரசர்மா
2. வண. பிதா ஜோசப் மொன்பேட் அடிகளார்



## வாழ்த்தி வரவேற்கின்றோம்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை
முன்னாள் தலைவராகவும்,
தெல்லிப்பழை ப. நோ. கூ சங்க
நீண்டநாள் தலைவராகவும்,
அளப்பரிய சேவை புரிந்து
மிக்க புகழ்பூத்த
கூட்டுறவாளரும்,
சமூக சேவையாளருமாகிய,



திரு. சிவமகாராசா

ஆசியுரை:-

1. பிரம்மஸ்ரீ கா. புவனேந்திரசர்மா
2. வண. பிதா லூயிஸ் மொன்பேட் அடிகளார்
3. போதகர் எஸ். ஆனந்தராஜன்

சிறப்பு விருந்தினர்கள் :-

1. திரு. நா. சங்கரப்பிள்ளை
(தலைவர், நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்)
2. திரு. க. அரசரட்ணம்
(கோட்டக் கல்வி அதிகாரி, நெடுந்தீவு)
3. திருமதி சா. கிருஷ்ணதாஸ்
(அதிபர் நெடுந்தீவு ம. வி.)
4. திரு. சு. நடராஜலிங்கம்
(அதிபர், சைவப்பிரகாச வித்தியாசாலை)
5. அருட்சகோதரி ஜெபசீலி றொட்றிக்கோ
(அதிபர், நெடுந்தீவு க. றோ. கல்லூரி)
6. திரு எஸ். எட்வேட்
(சமாதான நீதவான், நெடுந்தீவு)

நன்றியுரை: திரு இ. நித்தியானந்தன்
(கலாசார உத்தியோகத்தர்)
ஒலி, ஒளி: நெடுந்தீவு ஏ. அருந்தவசீலன்

வீடியோ -
படப்பிடிப்பு: சேதுபதி, நிமலரத்தினம், நெடுந்தீவு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெடுந்தீவு கலாசாரசபை

---


அன்பளிப்பு:

நாளைய நகரீகத்தை இன்றே அறிமுகம் செய்பவர்கள்

**நியூ விதுஷா நகைமாடம்**

191, K. K. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T P. 29 3 (1857)


| | |
|---|---|
| 149738 ஏ | 149760 ஏ |
| 149760 பி | 154330 ஏ |
| 154493 ஏ | 154493 ஏ |
| 154547 ஏ | 159548 ஏ |
| 159548 பி | 159718 ஏ |
| 159759 ஏ | 159750 பி |
| 159772 ஏ | 159772 பி |
| 159778 ஏ | 159778 பி |
| 150778 சி | 159802 ஏ |
| 159802 பி | 159807 ஏ |
| 159807 பி | 159836 ஏ |
| 159860 ஏ | 159860 பி |
| 159860 சி | 159869 ஏ |
| 162548 ஏ | 162548 பி |
| 162555 ஏ | 162568 ஏ |
| 162576 ஏ | 162576 பி |
| 162630 ஏ | 162663 ஏ |
| 162670 ஏ | 162670 பி |
| 162671 ஏ | 162671 பி |
| 162697 ஏ | 162697 பி |
| 162699 ஏ | 162699 பி |
| 162720 ஏ | 162721 ஏ |
| 162721 பி | 162731 ஏ |
| 163645 ஏ | 163653 ஏ |
| 163653 பி | 163654 ஏ |
| 193654 பி | 163655 ஏ |
| 163656 ஏ | 163656 ஏ |
| 163673 ஏ | 167001 ஏ |
| 167001 பி | 167001 சி |
| 167009 ஏ | 167009 பி |
| 167023 ஏ | 167023 பி |
| 167023 சி | 167023 டி |
| 167023 ஏ | 167028 பி |
| 167028 சி | 167032 ஏ |
| 167032 பி | 167033 ஏ |
| 167033 பி | 167034 ஏ |
| 167034 பி | 167035 ஏ |
| 167035 பி | 167035 சி |
| 167035 டி | 167041 ஏ |

சமூக சேவையாளருமாகிய,

# திரு. சிவமகாராசா
## அவர்கள்

11.ஆவது பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்ட உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டமையை கூட்டுறவாளர் சார்பில் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

பணிப்பாளரும், பணியாளரும்
கட். நெல். ப. நோ. கூ. சங்கம்
24-10-2000
கரவெட்டி. (கி – 977)

---

# கண்ணீர் அஞ்சலி

நெல்லியடி சந்தை குத்தகைதாரர்

## திரு. கந்தப்பு - தவராசா
## (பவா)

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு கலங்கி நிற்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள், மற்றும் ஊழியர்கள்.
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
கரவெட்டி.
(கி–978)

தலைவர்
வல்லிபுரம் நடராசா

# மெய்ப்பொருள் உணர்ந்து அனுஷ்டிப்போர்க்கு மேலான வரமருளும் கேதாரகௌரி விரதம்

★ காரை பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா ★

இந்துக்கள் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடிய கையோடு, கேதாரீஸ்வரர் நோன்பு விஷேசமாக் கடைப் பிடிப்பார்கள். சிலர் தீபாவளி தினத்தன்றும் இந்த விரதத்தைக் கடைபிடிப்பார்கள். சைவர்கள் தீபாவளியை விட இந்த நோன்பைத்தான் பெரிதாக பய பக்தியோடுசெய்கின்றார்கள்.

பெண்கள், அதுவும் கன்னிப் பெண்கள் காலையிலிருந்து மாலைவரை தண்ணீர் கூட அருந்தாமல் விரதம் இருந்து வீட்டிலோ அல்லது கோயிலுக்கோ சென்று நோன்பு பூசையில் கலந்து கொள்வார்கள்.



## விரதநியமம்

புரட்டாதி மாதம் சுக்கில பட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்ச தீபாவளி அமாவாசை வரைக்கும் இருபத்தி ஒருநாள்பிரதி தினமும் இந்த நோன்பை கடைப்பிடிக்க வேண்டும் என்பது முறை. ஆனால் இப்பொழுதுள்ள காலச் சூழ்நிலையில் ஒரு நாள் விரதத்தைதான் கடைப்பிடிக்கிறார்கள்.

விரதம் இருப்பவர்கள் அனைவரும் 21 வாழைப் பழம், 21 வெற்றிலை, 21 பாக்கு, 21 மஞ்சள், 21 அதிரசம், குங்குமம், நோன்புக் கயிறு முதலானவற்றை நைவேத்தியமாக வைத்து விட்டு அருகில் அமர்ந்து கேதாரீஸ்வரரை மனதில் தியானம் செய்தல் வேண்டும்.

வில்வம், தும்பை, கொன்றை மலர்களால் அர்ச்சனை செய்தல் வேண்டும்.

அன்றைய தினம் மந்திரங்கள் சொல்லி, பூசை செய்வதுடன் அடியார்களும் எந்த நேரமும் ஓம் சிவாயநம அல்லது ஓம் நமசிவாய என்ற மந்திரத்தை திரும்பத் திரும்ப மனதிற்குள் கூறிக் கொண்டு இருத்தல் வேண்டும்.

கோயில்களில் நெய்வேத்தியமும் தாம்பூலாதிகளும் சமர்ப்பித்து தூபதீபம் காட்டி கற்பூர தீபாராதனை செய்து அடியார்கள் 21 தரம் பிரதட்சிணம் செய்து (முடியாதவர்கள் 3 முறை செய்யலாம்) கையில் கொடுக்கப்பட்ட அக்ஷர புஷ்பம் என்பவற்றை சுவாமியின் மேல் போடச் செய்து கற்பூர தீபாராதனை செய்வார்கள். அதன் பின் அடியார்களுக்கு சிரசின் மேல் அட்சதை போட்டு புஷ்பமும் நோன்புக் கயிறும் கொடுப்பார்கள். அந் நோன்புக் கயிற்றை கையில் அணிந்து கொள்ளுவார்கள். இந்த கேதாரீஸ்வரர் விரத பூஜையில் பெண்கள் கூட்டாக கலந்து கொண்டு பூஜை செய்வது பார்க்க ரம்மியமாக இருக்கும். கேதாரகௌரி விரதத்தை நியமமாக விரும்பிச் செய்பவர்களுக்கு பரமேஸ்வரன் சகல செல்வங்களையும் அனுக்கிரகிப்பார் என்பது இந்துக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ஜகன் மாதா பார்வதி தேவி ஏன் இந்த நோன்பை கடைப் பிடித்தார் என்பதைப் பார்ப் போம். கைலாயத்தில் நவரத்தினங்களால் இழைத்த சிம்மாசனத்தில் பரமேஸ்வரரும் பார்வதி தேவியும் வீற்று இருக்க பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும் அஷ்டதிக்கு பாலகர்களும் தினமும் இருவரையும் பிரதக்ஷிணக நமஸ்காரம் செய்து கொண்டு போவார்கள்.

ஒரு நாள் பிருங்கி முனிவர் பரமேஸ்வரரை மட்டும் வணங்கி விட்டு பார்வதி தேவியை வணங்காமல் சென்று விட்டார். அவரின் இச் செயலைக் கண்டு கோபமுற்ற பார்வதிதேவி பரமேஸ்வரரிடம் காரணம் கேட்க, ''பிருங்கி முனிவர் பாக்கியத்தைக் கோருபவர் அல்ல மோக்ஷத்தைக் கோருபவர். அதனால் தான் என்னை மட்டும் வணங்குகின்றார்'' எனக் கூறினார். அதைக் கேட்ட பார்வதி உடனே ''பிருங்கியே உனது உடம்பிலுள்ள இரத்தம் மாமிசம் என்பது எனது அம்சமாதலின் அவற்றைக் கொடு என்றார். உடனே முனிவர் தன் உடம்பிலுள்ள இரத்தம், மாமிசம் என்பவற்றை உடனே உதறி விட்டார். அவரின் உடல் வலிமை நீங்கிப் போய் விட்டது. பிருங்கி முனிவர் நிற்க முடியாத அசந்தனாகி விடுகின்றார்.

உடல்வலிமை நீங்கப் பெற்று நிற்க முடியாத நிலையில் நின்ற பிருங்கியைப் பார்த்து ''நீ ஏன் அசத்தனானாய்'' என்று இறைவன் கேட்க;பிருங்கி, ''ஈஸ்வரா தேவியை விட்டுத் தேவரீரை மாத்திரம் வணங்கியமைக்கு தேவியளித்த தண்டனை இது''என விண்ணப்பித்து நின்றார். பரமேஸ்வரன் கருணை கூர்ந்து ஒருதண்டை யீந்தருள அதனை ஊன்று கோலாகக் கொண்டு தன் ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தார்.

## பூலோக வாசம்

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த பார்வதி கைலாசத்தை விட்டு நீங்கி பூலோகத்தையடைந்து கௌதமர் என்னும்முனிவரது ஆச்சிரமத்தையடைந்தார்.

12 வருடங்களாக மழை இல்லாது வாடிவதங்கி நின்ற ஆசிரமத்து நந்தவனம்துளிர்த்தும் தழைத்தும் புஷ்பித்தும் பரிமளித்து எங்கும் நறுமணம் வீசியது.

ஓட்டையும் செம்பொன்னையும் ஒப்பநோக்கும் கௌதம முனிவர் தர்ப்பை முதலிய பொருட்களுக்காக வெளியில் சென்று,ஆச்சிரமத்தையடைந்த போது நந்தவனத்தின் குளிர்மையைக் கண்டு அதிசயித்தார்.

இவரது ஆசிரமத்திற்கு உமாதேவியார் எழுந்தருளியிருப்பதை அறியாத முனிவர் நந்தவனத்தைச் சுற்றிவருகின்ற பொழுது வில்வமரத்தடியில் எழுந்தருளியிருக்கும் தேவியைக் கண்டார். உடனே தேவியை வணங்கி நீர் பூலோகத்திற்கு எழுந்தருளியிருக்கும் காரணம்யாதோ என்றுகேட்டபொழுது கைலாசத்தில் நடந்த சம்பவங்களையெல்லாம் கூறினார்.

இங்ஙனமாகத் தேவிகௌதமரை நோக்கி போதனரே சிவபெருமானுக்கு இடப்பாகத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு இப்பூவுலகில் யான் ஓர் விரதம் அனுஷ்டிக்க வேண்டும் மிகவும் மகத்துவம் நிறைந்த விரதமொன்றை அதனை அனுஷ்டிக்கும்முறைமையுடன் உணர்த்த வேண்டும்.எனக்கேட்டார்.

''தாயே இந்தப் பூலோகத்தில் இது வரை யாரும் அனுஷ்டிக்காத கேதாரகௌரி விரதத்தைநீங்கள் அனுஷ்டித்தால் இஷ்ட சித்திபாகும்'' என்றுகூற அம்பாளும் அதன்படியே புரட்டாதி மாதம் சுக்கில பட்சம் தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சம் தீபாவளி அமாவாசை வரைக்கும் இருபத்தி ஒரு நாள் உபவாசமிருந்து கேதார கௌரிபூசை செய்து வந்தார்.

## இடப்பாகம் பெற்றமை

தேவியின் விரதத்தில் மகிழ்ந்த ஈஸ்வரன் தீபாவளி அமாவாசையில் அன்று தேவகணங்கள் புடை சூழ ரிஷப வாகனத்தில் பூலோகத்திற்கு வந்து தமது இடப்பாகத்தை தேவிக்கு கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக கைலாயம் சென்றடைந்தார்.

இவ்விரதத்தின் மேன்மையை அறிந்ததேவர்களும் தேவகன்னிகைகளும் கங்கை கரையில் இவ்விரதம் அனுஷ்டித்து மேன்மையடைந்தார்கள்.

★ 21 இழைகளாலான காப்பைஆடவர்கள் வலக் கையிலும் பெண்கள் இடக் கையிலும் அணிய வேண்டும்.

★ ★

# இராசி பலன்

27-10-2000
(ஐப்பசி 11 வெள்ளி)
அமாவாசை பி.ப 2 06 வரை, சித்திரை மு.ப 7.50 வரை, ராகுகாலம் 10.33- 12.03, சுபநேரம் 6.03- 7.33 சித்தம், அமாவாசை விரதம், கேதார கௌரி விரதம்

★ **மேடம்**
சுவாரஸ்யம், வாகனவசதி, கௌரவம், போசன சுகம், தனவரவு.

★ **இடபம்**
தொழில் விருத்தி, நோய் குணமடைதல், பகைவர் விலகுவர்.

★ **மிதுனம்**
தாழ்வு நிலை, பிரயாண இடைஞ்சல், சிறுவியாதி, புத்திரர்களால் கவலை.

★ **கடகம்**
சுகக்குறைவு, பயந்த சுபாவம் நம்பிக்கையின்மை, கல்வி மேன்மை.

★ **சிங்கம்**
தனவரவு, முயற்சிவெற்றி, இனிய நிகழ்வு, உறவினர் உதவி.

★ **கன்னி**
விதண்டாவாதம்,பொருள் விரயம், கௌரவக்குறைவு.

★ **துலாம்**
ஆத்ம சிந்தனை, புதிய பொருள் சேர்க்கை, விருந்துபசாரம், காரிய சித்தி.

★ **விருச்சிகம்**
பிரயாணம், தலையிடி, காரியத்தாமதம், சயன சுகக் குறைவு.

★ **தனுசு**
மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, தனவரவு, புகழ்.

★ **மகரம்**
தொழில் அதிகாரம், முயற்சிபலிதம், எதிர்பாராத லாபம்.

★ **கும்பம்**
தந்தை வழி உறவு, பிரயாணம், வயிற்றுக்கோளாறு, உடல் உழைப்பு.

★ **மீனம்**
பிரயாணப்பயம்,உறவினர் விரோதம், நோய் பீடித்தல், கடன் தொல்லை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

பண்டாரவளை படுகொலை

பிரதேச தலைவர் மீது

தவர்கள் 3 முறை செய்ய லாம்) கையில் கொடுக்கப் பட்ட அக்ஷர புஷ்பம் என்

சென்று விட்டார். அவரின் இச் செயலைக் கண்டு கோப முற்ற பார்வதிதேவி பரமேஸ்

கண்டு அதிசயித்தார்.

இவரது ஆசிரமத்திற்கு உமாதேவியார் எழுந்தருளியி

கையிலும் அணிய வேண்டும்.

(பழைய நேரப்படி கணிப்பி டப்பட்டது)

★ ★

வளவன்

# பண்டாரவளை படுகொலை கட்சிகளுக்கும் தொடர்பாம்

## அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பண்டாரவளை புனர் வாழ்வு தடுப்பு முகாமில் நடந்து முடிந்த காட்டு மிராண்டித்தனத்திற்கும் தென்பகுதியிலுள்ளசந்தர்ப்ப வாத அரசியல் கட்சிகளுக்கும் சம்பந்தம் இருக்கலாம் எனும் சந்தேகங்கள் தோன் றியுள்ளன.

இவ்வாறு தகவல் மற்றும் தொடர்பு சாதன அமைச்சர் அனுரபிரியதர்ஷனயாப்பா கூறியுள்ளார்.

வகுப்புவாத கலவரங்களைத் தூண்டி அரசைச் சங் கடத்தில் ஆழ்த்தும் நோக்கம் கொண்டவர்களே இவ்வா றான மிருகத்தனமான செய லில் ஈடுபட்டிருக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவத் திற்கும் விடுதலைப்புலிகளுக் கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் பாதுகாப்பு வட்டாரங்களில் நிலவுவதாக வும் அறியப்படுகிறது.

விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் மேற்படி முகாமிற்கு அண்மையில் விஜயம் செய்தி ருப்பதாக கிடைத்ததகவலை யடுத்தே மேற்படிஊகத்திற்கு படைத்தரப்பு வந்திருக்க லாம் என்றும் ஊகங்கள் தெரிவிக்கின்றன.

(கு-உ)

## இலங்கையில் 10இலட்சம்பேர் நீரிழிவு நோயால் பாதிப்பு

இலங்கையில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர் கள் எண்ணிக்கை பத்துலட் சம் ஆகும். என நீரிழிவு நோயாளர் சங்கத்தின் தலை வர் வைத்திய நிபுணர்மகேன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

காலிநகர மண்டபத்தில் நீரிழிவு நோய் சம்பந்தமான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் உலகம் முழுவதும் 150 மில்லியன் நீரிழிவு நோயாளர்கள் இருப்பதாக வும் கூறியுள்ளார்.

இந்நோய் ஒரு பரம்பரை நோய் என குறிப்பிட்ட அவர் இதனை இலகுவில் மாற்ற முடியாது எனவும் கட்டுப்படுத்த மாத்திரமே முடியும் எனவும் விளக்க மளித்துள்ளார்.

(கு-5)

## சஞ்சிகை வெளியீடு

உயர் தொழில் நுட்ப நிறு வன மாணவர் ஒன்றியத்தி னால் வெளியிடப்படும் முத லாவது சஞ்சிகையான ''வித்தகம்'' சஞ்சிகை எதிர் வரும் 1 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு மேற் படி நிறுவன மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.(செ)

## பிரதேச தலைவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

காலியெல பிரதேச சபை யில் பணிபுரியும் பெண் ஊழி யர் மீது தகாத முறையில் நடக்க முற்பட்ட பிரதேச சபைத் தலைவர் ஆர். எம். எல். ஆர். ரத்தினாயக்கா மீதுஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந் திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஊவா மாகாண முதலமைச்சருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர் பாக தெரியவருவதாவது;

பிரஸ்தாப பெண் கடமை யில் இருந்த வேளை பிரதேச சபைத் தலைவர் ரத்னா யக்கா அவர் மீது தகாத நட வடிக்கையில் ஈடுபட முற் பட்டார் எனவும், இதனால் மேற்படி பெண் அவரிட மிருந்து சாதுரியமாக தப்பிச் சென்று பொலிஸில் முறைப் பாடு செய்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் கைது செய் யப்பட்ட பிரஸ்தாப நபர் ரத்னாயக்கா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு ஐம்பதா யிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட் டுள்ளார்.

இதே வேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிர தேச சபைத் தலைவர் ரத்னா யக்காவை பதவியிலிருந்து நீக்குமாறும் உத்தரவு பிறப் பித்துள்ளதாக அறியப் படுகிறது.

(கு-2)

## விதைகள் விநியோகம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச விவ சாயிகளுக்கு தேவையான நல்லின விதைகள் கெயர் நிறு வனத்தினரால் இலவசமாக வழங்கப்பட்டது.

நெடுந்தீவுப் பிரதேச விவ சாயத்தைப் பேணும் பொருட்டு சென்ற ஆண்டும் விவசாயிகளிக்கு இலவசமாக நல்லின விதைகள் வழங்கிய மையும்தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு யாழ்ப்பா ணத்தில் வைத்து ஒருமாத காலபயிற்சி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

(செ-82)

# பொதுஅறிவு வினாக்கள்

## இல 28 தொகுப்பு: யூட்

### பின்வரும் நாடுகளின் தலைநகரங்கள் எவை?

01) ஐவரி கோஸ்ட்
02) குவட்டமாலா
03) கானா
04) நைஜர்
05) ஓமான்

### பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?

06) டென்மார்க்
07) டொமினிகா
08) கெப்பியா
09) லெபனான்
10) ஈரான்
11) மறைந்தும் மறையாத புன்னகை அரசியார்?
12) முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?
13) சமுதாய ஒப்பந்தம் எனும் நூலை எழுதியவர் யார்?
14) பபிலோன் தொங்கு தோட்டம் கட்டியவர்?
15) போக்குவரத்துச் சேவை தேசிய மயமாக்கப்பட்ட காலம்?
16) உலகின் சக்கரைச்சாடி எனும் சிறப்புப் பெயர் கொண்ட நாடு?
17) ஆசியாவில் முதல் நோபல் பரிசு பெற்ற அறிஞர்?
18) ஆட் கொல்லி மரங்கள் உள்ள இடம்?
19) டிசெம்பர் 23 எந்த முக்கிய தினமாக கொள்ளப்படுகின்றது?
20) இந்தியாவின் பூந்தோட்டம் எனும் சிறப்புப் பெயர் கொண்ட நகரம் எது?
21) எலக்ரிக் பல்பில் நிறைக்கப்பட்டிருக்கும் வாயு?
22) TFAO,இதன் தமிழ் விரிவாக்கம் யாது?
23) WHO,இதன் தமிழ் விரிவாக்கம் யாது?

### பின்வருவன எத்தகைய நோக்கத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன?

24) ஒலிவ் மரத்தின் இலை?
25) பச்சை விளக்கு
26) கப்பல்களில் மஞ்சள் கொடி
27) தீப்பந்தம்
28) மேல் நோக்கி செங்குத்தான கொடி
29) சின் பெற் என்றால் என்ன?
30) கானாவின் உத்தியோக பூர்வ செய்தி நிறுவனம் எது?
31) உலகின் மிக உயரத்தில் உள்ள நாடு?
32) தற்போதைய உலக செஸ்.வெற்றி வீரர் யார்?
33) ''கிராண்ட்'' மாஸ்டர் பட்டத்தை வென்ற முதல் சதுரங்க இந்திய வீரர்?
34) ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அதிக சதம் எடுத்தவர் யார்?
35) டென்மார்க்கின் விமான நிலையம்?
36) ஹங்கேரியின் பாராளுமன்றம் எவ்வாறு அழைக்கப்படும்
37) அர்த்த முள்ள இந்து மதம் எனும் நூலை எழுதியவர் யார்?
38) முதன் முதலில் விம்பிள்டன் விளையாடிய இந்திய வீரர் யார்?
39) வன்னிப் பிரதேசத்தில் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக

## பொது அறிவு வினா இல 27

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

1. பா. இந்திராதேவி, யாழ்ப்பாணம்,
2. கே. பிரியவதனா, நெல்லியடி.
3. கோ. அருள்ராஜ்,கொக்குவில்.
4. செ. ஜெரீம் நிரோசன் வட்டுக்கோட்டை.
5. சி. தா ட்ச யினி நல்லூர்
6. ஜெ சங்கீதா கோண்டாவில்
7. பொ. பிரணவன் ஊர்காவற்றுறை.
8. உ. சுனித்தா, உருப்பிராய்.
9. து. உமா, சண்டிலிப்பாய்.
10. வே. அன்ரன் றெஜினோல்ட், ஆனைக்கோட்டை,
11. சி. காயத்திரி, நல்லூர்.
12. ச. சுஜன், நல்லூர்.
13. த. வைஸ்ணவி, தாவடி.

## பொது அறிவு வினா இல. 27 இற்கான விடைகள்

1) ரெவன்
2) குவைட்டோ
3) சான்சால்வடோர்
4) ஜார்ஜ்டவுன்
5) யாவூண்டே
6) குரூன்
7) ஹிரிவ்னியா
8) ரான்ட்
9) கில்டர்
10) புருண்டி பிராங்
11) டேவிட் டிரிம்பின், ஜான் ஹியூம் (அயர்லாந்து அமைதிஒப்பந்தகர்த்தாக்கள்)
12) பிரிட்டிஸ் பேராசிரியர் ஆடம்பேர்ஸ்
13) வலன்ரீனா பெரஸ்சோவா
14) சுவீடன்-ஆர். பி. கால்தர், அமெரிக்கா -போல் கிறீன்பாத், எடிற்கண்டல்
15) க ர்ஸ் பென்ஸ்
16) விவசாயிகள் தினம்
17) கொஸ்டுனிகா
18) சீஜிம்
19) நெதர்லாந்து
20) லியான்ஸ்
21) I nited Nation: Industrial De elopmentOrgan sation
22) தியோபுறோமின்
23) குஷ்டோவான் கார்ட்ட -1827
24) 1955
25) தென்னாபிரிக்கா

# துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் பலி

(புலோலி)

கரவெட்டியில் நேற்று முன்தினம்இரவு 7 45 மணியளவில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான கந்தப்பு தவராசா (வயது 40) என்பவர் இனம் தெரியாத ஆயுத பாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

நெல்லியடி பொதுச்சந்தைக் குத்தகைக்காரராகவும் பொதுப்பணிகளில் நாட்டம் உடையவராகவும்இவர் விளங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-42-52)

# பாடசாலைகளில் மேலதிக அலுவலர் பணிபுரிந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்

## க. பரமேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் அல்லது அலுவலகங்களில் அவற்றுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் அல்லது அலுவலர்கள் கடமையில் இருப்பின் உடனடியாக மேலதிகமாகவுள்ள ஆளணியினரை அவர்களுக்குப் பொருத்தமான ஆளணி வெற்றிடமுள்ள பதவிக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்

இவ்வாறு கோரும் சுற்று நிருபம் ஒன்று, வடக்கு. கிழக்கு மாகாண கல்வி,பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரனால் சகல மாகாண மற்றும் மேலதிகமாகாண கல்விப்பணிப்பாளர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள்,பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்,அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக அலுவலர் யாராவது கடமையில் இருப்பின் அவருக்கு வழங்கப்பட்ட சம்பளம் அல்லது கொடுப்பனவு, உரிய கொடுப்பனவு அதிகாரியிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# ஜே.வி.பி உறுப்பினர் தாக்கப்பட்டுள்ளார்

(கொழும்பு)

அம்பலாங்கொடபிரதேசத்திலுள்ள ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரினால் தாக்கப்பட்டு இடது கைமுறிந்த நிலையில் காலி காரப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தென்மாகாண சபையில் போட்டியிட்ட மக்கள் விடுதலை முன்னணியில் வேட்பாளர்களில் ஒருவரான ஜீ. வீரசூரிய என்பவரேஇவ்வாறு தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் அம்பலாங்கொட பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ந-4)

# ஐ. தே. க. தலைவர் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

கண்டி,நுவரெலியாமாவட்டங்களில் நீதியான முறையில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும்.

இவ்வாறு கொழும்பில் நேற்று முன்தினம் தொழில் சார் அதிகாரிகளைச் சந்தித்த போதும்போது ஐக்கிய

கையில்:

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் அநீதியான முறையில் நடைபெற்றதென்றும் கள்ளவாக்கின் மூலம் வெற்றி பெற்றவர்களே அதிகம் என்றும் இதனால் கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் தேர்

37) அர்த்த முள்ள இந்து மதம் எனும் நூலை எழுதியவர் யார்?

38) முதன் முதலில் விம்பிள்டன் விளையாடிய இந்திய வீரர் யார்?

39) வன்னிப் பிரதேசத்தில் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக எழுந்து உயிர் நீத்தவர்?

40) இலங்கையில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சி உள்ள பிரதேசம்

**குறிப்பு:-**

**இதற்கான விடைகள் 02-11-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்**

## அறிவியல் பகுதி வினா இல: 28

**"வலம்புரி"**
**இல: 15, வெள்ளாந்தெரு**
**யாழ்ப்பாணம்.**

மாணவர் முழுப்பெயர்; ..............................

சொந்த முகவரி; : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

மாணவர் கையொப்பம்; ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்

21) United Nations Industrial Development Organisation
22) திரியாபுறோமின்
23) குஷ்டோவான் கார்ட்ட -1827
24) 1955
25) தென்னாபிரிக்கா
26) ருமேனியா
27) 1945
28) ஹொயாங்கோ நதி
29) கனடாவில் 1930ல்
30) பிரான்ஸ் 1904
31) கோலாலம்பூர்
32) தென்கொரியாவின் பூசான் நகரில்
33) தாய்லாந்து-ராயல் டிகாகன் கொட்டல்
34) சி. என். கோபுரம்-கனடா
35) காஜி ஷெர்ப்பா
36) பெல்ஜியம்
37) Philippines News Agency
38) பாசிசம்
39) காபன்-டை-சல்பைட்டு
40) பெர்ரஸ் சல்பேட்

## கண்காட்சி

(மல்லாகம்)
வடபிராந்திய சத்தியசாயி நிலையங்கள் இணைந்து நாளை மறுதினம் 29 ஆம் திகதி கண்காட்சி ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது.

திருநெல்வேலி சத்தியசாயி நிலையத்தில் நடைபெற வுள்ள மேற்படி நிகழ்வில் ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (த-ப-14)

கண்டி, நுவரெலியா மாவட் டங்களில் நீதியான முறை யில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும்.

இவ்வாறு கொழும்பில் நேற்று முன்தினம் தொழில் சார் அதிகாரிகளைச் சந் தித்து பேசும்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கடந்த 10ஆம் திகதி நடை பெற்ற பொதுத் தேர்தலில் அநீதியான முறையில் நடை பெற்றதென்றும் கள்ளவாக் கின் மூலம் வெற்றி பெற்ற வர்களே அதிகம் என்றும் இதனால் கண்டி, நுவரெ லியா மாவட்டங்களில் தேர் தல் மீண்டும் நடத்தப்பட வேண்டும் என சம்மந்தப் பட்டவர்களை அவர்கேட் டுள்ளார். (க-5)

# படையிலிருந்து தப்பியவர் கொழும்பில் கைது

(கொழும்பு)
கிராண்ட்பாஸ் வீதியில் இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய நபர் ஒருவரை பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

முச்சக்கர வண்டி ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்ட இவரிடமிருந்து ரி-56 ரக துப் பாக்கி ஒன்றும் 2 கைக்குண்டு களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ந-4)

# அமைதியான முறையில் தீபாவளி கொண்டாட்டம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத் தில் நேற்றுஅமைதியானமுறை யில் தீபாவளிப் பண்டிகை கள் கொண்டாட்டம் இடம் பெற்றது.

மட்டக்களப்பு, ஆரையம் பதி, வாழைச்சேனை, களு வாஞ்சிக்குடி உட்பட பல இந்து ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடை பெற்றன. சமாதானத்திற் கும், அமைதிக்குமான பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

இம்முறை தீபாவளிக் கொண்டாட்டங்களில் முஸ் லிம்களும், தமிழர்களும் இணைந்து கொண்டாடினர்.

பொதுச்சந்தை, கடைகள் என்பன தீபாவளிப் பொருட் களைக் கொள்வனவு செய் யும் மக்களால் நிரம்பிவழிந் தது. (சு-60)

## இன்று ஒரு தகவல்

### மனிதர்களிடையே மரணத்திலும் வேற்றுமையுள்ளதா?

ஒரு ஊரில் பெரும்பணக்காரன் ஒருவன் இருந்தான். உலகப்போற்றும் செல்வம் முழுவதும் அவனிடம் இருந்தது. அதனால் அவன் ஊர்முழுவதும் புகழ் பெற்றிருந்தான்.

அச்செல்வந்தனுக்கு ஒரு மகனும் இருந்தான். காலங்கள் பல கழிந்தன.

ஒருநாள் அச்செல்வந்தன் மாரடைப்பால் இறந்து போனான்.

அவனுடைய இறுதி யாத்திரை பெரும் விமர்சையாக நடைபெற்றது.

மயானத்திலும் பளிங்குக் கல்லறையில் அவனுடல் அடக்கம் செய்யப்பட்டது.

ஒருவருடம் கழித்து அவன் நினைவாக அவனது மகன் தந்தையின் கல்லறை அருகில் உட்கார்ந்து இருந்தான்.

அதனைப் போல் ஒரு ஏழையின் மகனும் தன் தகப்பனின் புதைகுழி அருகில் உட்கார்ந்து இருந்தான்.

பணக்காரன் மகன் ஏழையின் மகனைப் பார்த்து ''என் தந்தையின் கல்லறை கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. மேலே பளிங்குக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.'' என்று கூறிப் பெருமைப்பட்டான்.

அதற்கு ஏழையின் மகன் ''இதில் என்ன இருக்கிறது. அந்தக் கனமான கற்களின் பாரத்திலிருந்து உன்தந்தை எழுவதற்கு முன் எனதுதந்தை வானுலகம் சென்றடைந்து விடுவார். அதுமாத்திரமன்றி வாழ்நாட்களில் செல்வச் சுமையை தாங்கி வாழ்ந்த உன்தந்தை தற்போது கற்சுமையைத் தாங்கி மீளமுடியாமல் உள்ளார்.

மரணத்தின் போது கூட அவர் ஆத்மா நிம்மதியாக சாந்தியடையவில்லை. ''என்றான்.

உலகில் வாழும் போது ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதமாக வாழ்கிறான், ஆனால் மரணப் பாதையில் ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையின்றி இறைவன் அவரவர் கன்ம வினைக்கேற்ப அவர்களை அணைத்துக்கொள்கிறான். இதுவே நியதி.

நன்றி

**போதனை களஞ்சியம்**

## சமுர்த்தி உதவி பெறுவோருக்கு 1 கோடி 50 இலட்சம் வழங்கப்பட்டது

### உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கடந்த எட்டுமாதகாலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதி உதவிபெறும் குடும்பங்களுக்கு 1 கோடி 50 இலட்சத்து 3 ஆயிரத்து 43 ரூபாய் உதவிப்பணமாக வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ஆர். நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

இறப்பு, திருமணம், பிறப்பு, மருத்துவம் என நான்கு பிரிவுகளைச் சேர்ந்த 5696 பேர் மேற்படி தொகை நிதியை உதவியாகப் பெற்றுள்ளனர்

1021 மரண நிகழ்ச்சிகளுக்கு 49 இலட்சத்து 95 ஆயிரமும், 1927 திருமணநிகழ்ச்சிகளுக்கு 19 இலட்சத்து 95 ஆயிரமும், 1295 பிறப்புச் சம்பவங்களுக்கு 25 இலட்சத்து 90 ஆயிரமும், 1453 மருத்துவ நிகழ்ச்சிகளுக்கு 9 இலட்சத்து 63 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியிலேஇத்தொகை வழங்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (-க60)

### நெடுந்தீவில் பனம்விதை நடுகை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் பெருமளவு பனைமரங்களை வளர்க்கும் பொருட்டு நெடுந்தீவுப் பிரதேசசபையும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து பனைநடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன் ஆரம்பக் கட்டமாக நெடுந்தீவு மத்தி ஓமலாக்காடு என்னும் இடத்தில் ஒரு தொகுதி பனம்விதைகளை நாட்டியுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேசசபையும் நெடுந்தீவு மரநாட்டு இயக்கமும் 1998 ஆம் ஆண்டில் இருந்து பனை நடுகையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-82)

### சங். வைத்தியசாலையில் நோயாளர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சங்கானை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் நாள்தோறும் 150 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவந்த போதிலும் தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதினாலேயே சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக சங்கானை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-12)

### கோண்டாவிலில் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் லொறி விபத்து ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

மிருசுவிலில் இருந்து இடம்பெயர்ந்து இருபாலையில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான ராசா சிவபாத சுந்தரம் (வயது 50) என்பவரே காலில் காயமடைந்து மயிரிழையில் உயிர் தப்பியவராவார். (க-12)

### வெட்டிக் கொலை

(கொழும்பு)

வென்னப்புவ பகுதியில்ஸ்ருடியோ ஒன்றின் முன்னால் பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சைக்கிளில் வந்த நபர் ஒருவர் 55வயது மதிக்கத்தக்க பெண்ணை கத்தியால் குத்தி கொலை செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-5)

### மாத்தளையில் பரவும் டெங்குக் காய்ச்சல்

(கொழும்பு)

மாத்தளை பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

இவரை ஒரு வைத்திய அதிகாரி உட்பட நான்கு பேர் இறந்துள்ளதுடன் 75 க்கும் அதிகமானோர் அரச தனியார் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாகாண அரசாங்க நிறுவனங்களினால் இன் நோயை அழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் திட்டங்கள் வெற்றியளிக்க வில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (க)

### பாசையூர் அந்தோனியார் ஆலயத்தை திறந்து பூசைகளை நடத்துக

#### இராணுவ அதிகாரி வேண்டுகோள்

(சுண்டுக்குளி)

கடந்த ஆறு மாத காலமாக எவ்வித ஆராதனைகளும் நடைபெறாமல் இருக்கும் பாசையூர் அந்தோனியார் ஆலயத்தை உடனடியாகத் திறந்து ஆராதனைகளை நடத்துமாறு பாசையூர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்டவர்களை கேட்டுள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பு அந்தோனியார் கோயிலின் பரிபாலன சபையின் செயலாளர் எஸ். கிளி பேட்டை முகாமிற்கு அழைத்து ஆலயம் பற்றி கலந்துரையாடியபோதே இராணுவ அதிகாரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனால் இன்று வெள்ளிக்கிழமை சிரமதான முறையில் ஆலயத்தையும், சுற்றாடலையும், துப்பரவு செய்வதற்கான நடவடிக்கைகளை ஆலய பரிபாலன சபையினரும் பாசையூர் மக்களும் மேற்கொண்டுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-4-110)

### த. வி. கூ ஆதரவாளர்க்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து, நாளை யாழ். நகரில் நடைபெறும் கண்டன அமைதிப்பேரணியில் தமது ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு

### பாவனையாளர் சங்கம் அமைக்க முயற்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் பாவனையாளர் சங்கம் ஒன்றினை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர் கிராமங்களை

மேற்கொண்டுவருகின்றார்.

மேற்படி பிரதேசத்தில் 15 ஆயிரம் மக்கள் வழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

### பெற்றோல், டீசல் விலை விரைவில் அதிகரிக்கும்?

### கௌரிவிரதம்

# பெற்றோல், டீசல் விலை விரைவில் அதிகரிக்கும்?

## உயர் அதிகாரி தகவல்

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் விரைவில் அதிகரிக்கும் சாத்தியம் நிலவுவதாக பெற்றோலியக்கூட்டுத்தாபன உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை 135.5% ஆல் அதிகரித்ததையடுத்தே இவ்விலை உயர்வு ஏற்படும் எனதான் விரும்புவதாகவும்அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோல் 10 ரூபாவாலும் ஒருலீற்றர் டீசல் 6. ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் நம்பிக்கை வெளியிட்டார். (க)

பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து, நாளை யாழ். நகரில் நடைபெறும் கண்டன அமைதிப்பேரணியில் தமது ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு துண்டுப்பிரசுரம்மூலம்தமிழர் விடுதலைக்கூட்டணி கோரியுள்ளது.

அடிப்படை மனிதஉரிமை மீறல்களை-சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே எதிர்த்து வந்த கூட்டணி தொடர்ந்தும் மனிதஉரிமை மீறல் சம்பவங்களைக் கண்டிக்கும் எனவும் அத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

செயலர் பிரிவில் பாவனையாளர் சங்கம் ஒன்றினை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர் கிராமங்களை உள்ளடங்கியதாக மேற்படி பிரதேசத்தில் இச்சங்கம் அமைக்கப்படவுள்ளது.

அடிப்படைத் தேவைகளை இப்பகுதியில்உள்ளமக்கள் நிறைவேற்றும் பொருட்டும் இச்சங்கம் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை இப் பகுதிஉதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம்

...ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# கௌரிவிரதம்

(அரியாலை)

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை கேதார கௌரி விரதமும் சுக்கிரவார உற்சவமும் நடைபெறவுள்ளது.

காலை 9-00 மணிக்கு அம்பாளுக்கு சகஷ்ர நாமார்ச்சனை இடம்பெறவுள்ளது.

(செ-106)

### இலங்கையில்

# இருபெரும் கட்சிகளின் இணைவு

# சிறுபான்மையினரைப் பாதிக்கக்கூடாது

## பி. பி. தேவராஜன் எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் நாட்டு நலன் தொடர்பாக ஏற்படுத்தும் இணக்கப்பாடுகளால் சிறுபான்மையினரின் உரிமைகள் எந்தவொரு வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என கொழும்பு மாவட்ட ஐ. தே. க. எம்.பி. பி.பி. தேவராஜன் தெரிவித்துள்ளார்.

அடுத்து வரும் இரண்டு வருடங்களுக்கு தேசிய அரசு அமைக்கும் முயற்சியில் இரண்டு கட்சிகளுக்குமிடையே சுயாதீன அரச சேவை, தேர்தல் அரச சேவை, சுயாதீன பொலிஸ் சேவை ஆணைக்குழுக்களை அமைப்பது தொடர்பாக இணக்கப்பாடு நிலவிய போதிலும், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அக்கறை ஏதும் காட்டாது செயற்படுவது குறித்து சிறுபான்மையினர் மத்தியில் பெரும் அச்சமும் பீதியும் நிலவி வருகின்ற இவ்வேளையில் ஐ. தே. க. எம்.பி. இவ்வாறு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# ஒன்றாகப் பிறந்த மூன்று சகோதரர்கள்

## புலமைப் பரீட்சையில் சித்தி

ஒரே சூலில் பிறந்த சகோதரர்கள் மூவர் இவ்வருடம் நடைபெற்று முடிந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளனர். அம்பலாங்கொட 'போரம்' எனும் கிராமத்தில் வசிக்கும் ஆசிரியர் ஒருவரின் பிள்ளைகளான இவர்கள் முறையே பிரமித்த சதுரங்க 188 புள்ளிகளையும், மலித்த சதுரங்க 180 புள்ளிகளையும், சமித்த சதுரங்க 179 புள்ளிகளையும் பெற்று புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இதேவேளை இம் மூன்று சகோதரர்களும் மேலதிக வகுப்புக்களுக்குச் செல்லாது தங்களது விடாமுயற்சியாலேயே புலமைப் பரிசில் பரீட்சையிற் சித்தியடைந்துள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந - 4)

# பலஸ்தீன மக்களை பாதுகாக்க ஐ. நா. படை அனுப்ப கோரிக்கை

(ஜெருசலேம்)
பலஸ்தீன மக்களை காக்கும் வகையில், உடனடியாக அங்கு ஐக்கிய நாடுகள் அமைதிப்படையை அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு பாலஸ்தீன அவசர குழு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையை கேட்டுள்ளது.

ஜெருசலேம் உள்ளிட்ட பலஸ்தீனப் பிராந்தியத்தில் பலஸ்தீனிய மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஐ.நா அமைதிப் படை அனுப்பி வைக்கப்பட வேண்டும் என மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பாலஸ்தீனியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய சர்வதேச சமூகம் முன் வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# மேற்காசிய சமாதானத்துக்கு மீண்டும் அமெரிக்கா முயற்சி

(வாஷிங்டன்)
மேற்கு ஆசிய சமாதான முயற்சியில் மீண்டும் அமெரிக்கா இறங்கியுள்ளதாக வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் பலஸ்தீனத் தலைவர்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இரு நாடுகளுக்கிடையேயும் உள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மீண்டும் தனித்தனியே சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அமெரிக்க வெள்ளை மாளிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து அமெரிக்க அதிபர் பில்கிளிங்டன் இஸ்ரேல் பிரதமர் எஹுட்பராக்கையும் பலஸ்தீன அதிபர் ஜஸீர் அரபாத்தையும் எந்த நடவடிக்கைகளிலும் இறங்க வேண்டாமெனவும் இருநாட்டவர்களையும் சட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் படியும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதேவேளை ரஷ்யாவும் இருபகுதியினரையும் அமைதியைப் பேணும்படி கேட்டிருக்கிறது.

இதற்கிடையில் பலஸ்தீன அதிபரை இஸ்ரேல் அதிபர் நேருக்கு நேர் சந்திக்க விரும்பவில்லையென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# தமிழ் நாட்டில் 12 மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயாளர் அதிகரிப்பு

## பாதுகாப்பு சங்கம் அறிவிப்பு

(சென்னை)
தமிழ் நாட்டில் 12 மாவட்டங்களை எய்ட்ஸ் உயிர் ஆபத்து இடங்களாக எய்ட்ஸ் பாதுகாப்புச்சங்கம் அறிவித்துள்ளது.

அந்த மாவட்டங்களில் எய்ட்ஸ் காவிகள் இருப்பதாக இந்தச் சங்கத்தின் ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஈரோடு, திருச்சி, சென்னை, கோயம்புத்தூர், சேலம், காஞ்சிபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களே எய்ட்ஸ் தொற்றுக்கள் இனங்காணப்பட்ட மாவட்டங்களாகும்.

தமிழ் நாட்டில் 6 ஆயிரம் எய்ட்ஸ் நோயாளிகள் இனங் காணப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக டாக்டர்சி. கோபால் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இந்தநோயைக் கட்டுப்படுத்துவதற்காக குறிப்பாகப்பிரசாரம் சிகிச்சை என்பவற்றிற்காக 20 கோடிரூபா செலவாகியிருப்பதாக அரச வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# ரஷ்ய விமானம் மலையில் மோதியது 82 பேர் ஸ்தலத்தில் பலி

(மொஸ்கோ)
ரஷ்யாவில் நேற்று முந்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் 82 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜகியா குடியரசில் ஒரு மலைப்பிரதேசத்தில் 82 பேருடன் சென்ற விமானம் மலையில் மோதியதாக அறிவிக்கப்படுகிறது.

பனிமூட்டத்தால் விமானம் திசைமாறிவிட்டதால் இந்தக் கோரச் சம்பவம் நடைபெற்றிருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களில் 8 பேர் குழந்தைகளென்றும் மீட்புப் பணிகள் தொடர்கின்றன வென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# ஐவரிக்கோஸ்றில் அவசரகால

# இந்திய மாடல் அழகி இலண்டனில் கௌரவம்

(இலண்டன்)
இலண்டனில் நடைபெற்ற புதிய பாணியிலான ஆடை அழகிகள் கண்காட்சியில் இந்திய பெண்சாதனை படைத்துள்ளார்.

இவர் அமைத்த ஆடை 1500 பவுண்ஸ் பெறுமதியானது என்றும் இவ்ஆடைக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த ஆடையில் ஓர் இந்திய பெண்மணி தன் குழந்தையை வைத்திருப்பதாய் ஒருபடம் பொறிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-து)

# ஜெயலலிதாவும் சசிகலாவும் மேல்முறையீடு செய்தனர்

(சென்னை)
தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் அவரது தோழியான சசிகலாவும் தங்கள் மீது வழங்கப்பட்ட மறியல் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்துள்ளனர்.

அண்மையில் உச்சநீதி மன்றத்தில் தங்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு அநீதியானதென்றும் தங்கள் சாட்சியங்களைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லையென்றும் குறிப்பாக பூரணமான விசாரணை நடைபெறவில்லை யென்றும் தனி நீதிமன்றம் இதை சரியான முறையில் கையாளவில்லையென்றும் மேல் முறையீட்டு நீதிமன்றில் மனுச் செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஜெயலலிதாவும் அவரது உடன்பிறவாச் சகோதரியும் தோழியுமான சசிகலாவும் தனித்தனியே உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். (து)

# காவல் நிலையத்தில் காங்கிரஸ்நடராஜ் மரணம்

## விசாரணைக்கு கோரிக்கை

(சென்னை)
தமிழக ராஜீவ் காங்கிரஸ் உறுப்பினர் நடராஜன் பண்ருட்டி காவல் நிலையத்தில் இறந்து விட்டார்.

மர்மமான முறையில் இவர் இறந்ததையடுத்து ராஜீவ் காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பெரும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

உலக தரிசனம்

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர் நடராஜன் இறந்ததையிட்டு அவரின் இறப்புப் பற்றி பூரண விசாரணை நடத்த வேண்டும் என்று தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அரசைக் கேட்டுள்ளார். (து)

# த 'காஸ்ற்' கப்பல் விவகாரம்

## சடலங்கள் மீட்கும் பணி முன்னெடுப்பு

(மொஸ்கோ)
கடந்த ஓகஸ்ற் மாதம் பாலரன்ஸ் கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகி நீரில் அமிழ்ந்து போன 'த காஸ்ட்' என்ற ரஷ்ய அணுவாயுதக் கப்பலில் இருந்த கடற்படையைச் சேர்ந்த 118 பேருடைய சடலங்களையும் மீட்கும் முயற்சிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீர்மூழ்கியில் ஏற்பட்ட துவாரமொன்றினூடாக சுழியோடி ஒருவர் சடலங்களை மீட்கவென உட்புகுந்துள்ளார்.

எனினும் கப்பலினுள் 5 மீற்றர் தூரம் வரை சுழியோடிய உட்சென்ற போதிலும் எந்தவொரு சடலமும் இன்னமும் காணப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதேவேளை மேற்படி சடலங்களை மீன்கள் இழுத்துச் சென்றிருக்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் சுழியோடிகள் மட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

...துள்ளனர்.

ஐ திபா முடிபாசில் ஒரு மலைப்பிரதேசத்தில் 82 பேரு

திசைமறிவிட்டதால் இந்தக் கோரச் சம்பவம் நடைபெற்

பணிகள் தொடர்கின்றன வென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

டைய சடலங்களையும் மீட்கும் முயற்சிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீர்மூழ்கியில் ஏற்பட்ட துவாரமொன்றினூடாக சுழியோடி ஒருவர் சடலங்களை மீட்கவென உட்

இதேவேளை மேற்படி சடலங்களை மீன்கள் இழுத்துச் சென்றிருக்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் சுழியோடிகள் மட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# ஐவரிக்கோஸ்றில் அவசரகால நிலை பிரகடனம் அமுல்

(அபிட்ஜான்)

ஐவரிக் கோஸ்ரின் பிரதான வர்த்தக நகரான அபிசான்றவில் காலவரையற்ற அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் இடம்பெற்று வரும் கடும் துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றும் உயிரழிவுச் சம்பவங்களைதணிக்கும் வகையிலேயே அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டிருப்பதாய் தெரிய வந்துள்ளது.

கடந்த ஞாயிறன்று ஐவரிக்கோஸ்ற்றில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஆட்சியாளர் ஜெனரல் றொபேட் குயிலும் அவரின் பரம அரசியல் எதிரியுமான போடன் கபாவும் தாமே வெற்றி பெற்றதாக கூறிவந்தனர்.

இதனையடுத்து இருசாராரின் ஆதரவாளர்களும்கண்ட கண்ட இடங்களிலெல்லாம் மோதி வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

# சிம்பாப்பே அதிபர் மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம்

(ஹராரே)

சிம்பாப்வேயின் அதிபரான ரொபேட்முகாபேயை பதவி விலக கோரும் தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சியான ஜனநாயக மாற்றத்துக்கான அமைப்பே பாராளுமன்றத்தில் இத்தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளது.

சபாநாயகர் இத்தீர்மானம் பற்றிவிவாதிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த 20 வருட காலமாக இடம்பெற்றமுகாபேயின் தொடர் ஆட்சிக்கு இது ஒரு சவாலாக அமையுமென்று கருதப்படுகிறது.

150 பேர் கொண்ட சிம்பாவே பாராளுமன்றத்தில் இந்த ஜனநாயக மாற்றத்துக்கான கட்சியில் 57 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

விவாதத்துக்குரிய நாள் விரைவில் குறிக்கப்படுமென்று தெரியவருகிறது. (து)

# விடுதலைப்புலிகள் மீதான தடையை உடன் நீங்க கோரிக்கை

## இந்திய வழக்கறிஞர் விடுத்தனர்

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்க வேண்டும் என மத்திய அரசின் நடுவர் மன்ற வழக்கறிஞர்கள் இந்தியமத்தியஅரசைக் கோரியுள்ளனர்.

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலையை அடுத்து 1992 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கம்மத்திய அரசால் தடை செய்யப்பட்டது.

இவ்வாறு தடை செய்யப்பட்டது சரியா? இது குறித்து உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரின்தலைமையில் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து நீதியான விசாரணை நடத்த வேண்டும்.

அத்துடன் தடை செய்யப்பட்ட செய்தியையும், அத்தடை 2 ஆண்டுகள் நடைமுறையில் இருக்கும் என்பதையும் சம்பந்தப்பட்டஇயக்கத்திற்கு அறிவிக்க வேண்டும்.

ஆனால் இது குறித்து விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அறிவிக்கப்பட வில்லை. எனவும் மத்திய அரசின் நடுவர் மன்ற வழக்கறிஞர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர் (உ-5)

## நியூசிலாந்தில் சட்டம் தளர்வு

(வெலிங்டன்)

நியூஸிலாந்து குடிவரவுகுடி அகல்வு சட்டத்தை திருத்தி அமைக்க இருக்கிறது என்று பிரதர் ஹெலன்ரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில்பயிற்சிபெற்ற தொழிலாளர்கள் இல்லையென்றும், தொழில் செய்வதற்கு போதிய தொழிலாளர்கள் இல்லையென்றும், மற்றும் சுற்றுலாத்துறையால் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும்சட்டத்தைத்திருத்தி அமைக்க வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார். (து)

# கோவா முதல்வராக மனோகர்

(கோவா)

கோவாவின் முதலமைச்சராக மனோகர் பரிக்க நியமிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை மாநில முதன் மந்திரியாகவும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். (து)

ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்.
குறள்

வலம்புரி

## கொடூரக் கொலைகள்

பதினோராவது பாராளுமன்றம் பதவியேற்ற 13 நாட்களுக்குள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட முதலாவது பரிசுச் செய்தி பண்டாரவளை பிந்துனுவேவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 25 தமிழ் இளைஞர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்களென்பதாகும். புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாமில் பொலிசாரும், இராணுவத்தினரும் பார்த்துக் கொண்டிருக்க சிங்களக் காடையர்கள்முகாமிற்குள்நுழைந்து அப்பாவித்தமிழ் இளைஞர்களைக் கண்ட பாட்டில் வெட்டியும், குத்தியும் கோரக் கொலை செய்துள்ளதுடன் 39 பேரை வெட்டிப் படுகாயப்படுத்தியுள்ளனர்.

இச் சம்பவம் நடந்து கொண்டிருக்கும் போது பொலிஸாரினதும், இராணுவத்தினரினதும்கைகளிருந்த துப்பாக்கிகள் மௌனம் சாதித்தன.

1983ம் ஆண்டு வெலிக்கடைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ்க்கைதிகள் அன்று வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இச்சம்பவங்கள் விளக்கமின்றி மூடிவிடப்பட்டது.

அதே பாணியில் தற்போது பண்டாரவளைக் கொலைகள் இடம் பெற்றுள்ளது புனர்வாழ்வு என்ற பேரில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ்இளைஞர்களுக்கு ஸ்ரீலங்கா அரசின் சன்மானம் இதுதான் என்பதை இனிமேலாவது

# இலங்கையின் முறைசார்கல்வியில்
# இடைநிலைமட்ட மாணவர்கள் மத்தியில்
# காணப்படும் கணிதபாட தாழ் அடைவு

கணிதபாடத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பலவருட கால அனுபவமுடைய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் த.காங்கேசபிள்ளை அவர்கள் இடைநிலை மட்ட மாணவர்கள் மத்தியில் மேற்கொண்ட கணிதபாட தாழ் அடைவு பற்றிய ஆய்வுக் கட்டுரை ஆசிரியர்கள் மாணவர்களின் நலன் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.(ஆ-ர்)

5

(நேற்றைய தொடர்ச்சி)

ஒவ்வொரு பிள்ளைக்கும் இயற்கைச் சூழல், நுண்ணறிவு, இயக்கத்திறன்கள் ஆகியன வரமாகக் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் சூழல் உள்ளார்ந்த சக்திகளை விருத்தி செய்வதற்கு சம அளவில்சேவை செய்வதில்லை. உண்மையில் வசதியற்றசூழல்களில் பிறந்தோர்உள்ளார்ந்த சக்திகளை விருத்தி செய்து கொள்ளலையும் இழக்கின்றனர். குறை வசதியுள்ள பகுதிகளில் கற்கும் பிள்ளைகள் போசாக்குக்குறைவும், பலவீனமும்,நோய்வாய்ப்பட்டும் இருப்பதோடு ஒருவித ஊக்குவிப்பையும் அனுபவிப்பதில்லை. சில பாடசாலைகளிலுள்ள பிள்ளைகள் தரம் 1 இல் உள்ளவர்களா அல்லது தரம் 6 இல் உள்ளவர்களா என இனங்காண முடியாதவாறு குறைவளர்ச்சியடைந்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. கல்வியில் பிள்ளை பங்குபற்றுதலும் ஒழுங்கற்றதாக இருக்கின்றது.இது பிள்ளையைமந்தமாகவும் பின்தங்கியவனாகவும் ஆக்குவதற்கான முதன்மைக்காரணிகளாக அமையலாம். எனவே பிள்ளை கல்வியில் எந்த அக்கறையும் காட்டாமல் இருப்பதற்கு அவர்களின் வறிய சமூக பொருளாதார காலாசார பின்னணியே எனக் கூறினால் அது மிகையாகாது. பொதுவாக இப்பின்னணியில்உள்ள பாடசாலையின் பண்புகள் பின்வருமாறு அமைந்திருக்கின்றன எனக்கூறலாம்.

1) மாணவர் தொகை குறைவு. இது போதியளவு ஆசிரியர்களையும் ஏனைய வளங்களையும் வழங்குதலை கடினமானதாகவும் செலவு மிக்கதாகவும் ஆக்குகின்றது,

2) கீழ்மட்ட ஆர்வங்கள், மக்களின் வருமானம்.

3) தூரமான அமைவுகள்.

4) குறைவான ஆசிரியர் பயிற்சியும், தொழில் நுட்பமும்.

நிலைமட்ட மாணவரின் கணிதபாட அவடைவைதாழ்வுறச் செய்கின்றன எனலாம்.

### யுத்த சூழல்

யுத்தமானது உலகில் சிறுவர்களையே அதிகம் பாதிக்கின்றது. குறிப்பாக மாணவர்களின் கல்வியை சீர்குலைத்து விடுகிறது. யுத்த முனையிலிருந்து தப்பியோடும் பெற்றோரும் தம் சிறார்களின் கல்வி பற்றியே அதிகம் கவலைப்படுகின்றனர். யுத்தத்தினால் மக்கள் தங்கள் வீடுகள், உடைமைகள், நிலங்கள் யாவற்றையும் இழந்த பின் மறுவாழ்வு அமைக்க முற்படும்போது அவர்கள் வேண்டிக் கொள்வது ''தம் பிள்ளைகளின் கல்விக்கு உதவுங்கள்'' என ஐ. நா கல்விசார் உயரதிகாரி மார்க்ரிச்மன் கூறுகிறார். இன்று இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்கில் இந்நிலையே காணப்படுகிறது. பல ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் யுத்த சூழலில், அதன் கொடுமையில் சிக்குண்டு யாவற்றையுமிழந்து வாழும் அகதி நிலையிலும் தம் பிள்ளைகள் கல்விகற்க வேண்டும் என்பதே அவர்களது அவாவாக இருக்கிறது எனவும் அறியமுடிகின்றது. உண்மையில் இவர்களில் சிலர் வெளிநாடுகளிற்குச் செல்லுவதற்கு முதற்காரணம் தமது பிள்ளைகளின் கல்வி தொடர வேண்டும் எனவும் கூறுகின்றனர்.

அமைதியான் குடும்பச் சூழ்நிலையில், சிதறிப் போன நிலையில் உள்ள பிள்ளைகள் குழப்பமற்ற முறைசார்ந்த பாடசாலைகளில் தான் கற்க முடியும். உண்மையில் இந் நெருக்கடி நிலையில் விரை

மறுக்கப்பட முடியாது. எனவே இதற்கமைய மனித நேய அமைப்புக்கள் உறுதியாக உலகளாவிய ரீதியில் செயற்பட்டாலும் இலங்கையில் வடக்கு கிழக்கில் அவற்றின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாயினும் பாதிக்கப்பட்டோருக்கு உயிர்வாழ்ந்திருக்க உதவுதலே அவற்றின் முக்கிய கவனமாக உள்ளது எனலாம். இதற்கடுத்து பாதிக்கப்பட்டோரின் முக்கிய கவனமாக அமைய வேண்டியது அவர்களின் பிள்ளைகளின் கல்விக்கு வழி செய்வதாகும்.

### உள பாதிப்பு

யுத்தத்தின கொடூரம் பிள்ளைகளின் உளநிலையைவெகுவாகப் பாதிக்கின்றது பிள்ளைகள் தமது இனிமையான இளமைப்பருவத்தை இழந்து விரக்தியுடனேயே வளர்கின்றனர். தம் கண் முன்னால்தமது அன்புப் பெற்றோர் குண்டு வீச்சு, எறிகணை வீச்சு, துப்பாக்கிச்சூடு போன்றவற்றால் கோரமாகச் சிதறி பலியாவதைக் கண்டு பயந்து மனம் தளர்ந்து போகின்றனர். மேலும் குடும்ப அங்கத்தவர்களை இழந்து தனிமைப்படுதல், நண்பர்கள், அயலவர்கள் துடிதுடித்து இறப்பது, தமது வீடுகள் குண்டு வீச்சினால் சிதறி அழிவது தமது கிராமமும் அங்கிருந்த வீடுகள், பாடசாலைகள், கோயில்கள்எரிந்து சாம்பலாகி சுடுகாடாகிப் போகும் காட்சி போன்றவையெல்லாம் சிறுவர்களின்உள்ளங்களை மிகவும் ஆழமாகப் பாதிக்கின்றன.

இவற்றினால் ஏற்பட்ட பயம், விரக்தி,சோகம் வாழ்வில் பற்றின்மை, நிம்மதியற்ற உறக்கம் யாவும் இப்பிஞ்சு

யானோர் வன்னிப் பிரதேசங்களில் மோசமான நிலைகளில் அகதிகளாக உள்ளனர் எனவும்,யுனிசெவ் அறிக்கைமூலம் அறியக்கிடக்கின்றது. மேலும் போஷாக்கின்மையால் பாதிக்கப்படும்சிறுவர்களில் அனேகர் வன்னிப் பகுதியிலேயே உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.இருக்க வசதியின்றித் தரையிலிருந்து கற்கின்ற துர்ப்பாக்கிய நிலையும் வன்னியிலேயே கூடுதலாகவுள்ளது. இடம் பெயர்வு தொடர்ந்து கொண்டே போவதல் மாணவர்கள் தொடர்ந்து கல்வியைத் தொடரமுடியாதநிலையில் அவர்களது உளம்பாதிக்கப்பட்ட நிலையில் தமது கல்வியைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் கல்வியில் பெரும் பின்னடைவு ஏற்படுவது சாத்தியமாகின்றது. இவ்வாறு இருக்கையில் இச்சூழல்களில்வாழும் பிள்ளைகளின் பாட அடைவுகளில் கணித பாட அடைவு எப்படியிருக்கும் என சொல்லவும் வேண்டுமா?

### அடைவுக்குறைவு

கணித பாட அடைவைத் தீர்மனிப்பதில்மாணவரின் கணிதக்கற்றலுக்கான அடிப்படைக்கல்விசார்திறன்கள்முக்கிய இடத்தை வகிக்கின்றன. இது பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் நோக்கப்படலாம்.

(தொடரும்)

தம்பியப்பா காங்கேசபிள்ளை
B. Sc. Dip - In - Edu. M. Phil (Edu.)

## துண்டுப் பிரசுரங்கள்

(அரியாலை)

சிறுவர்களுக்குபோலியோச் சொட்டு மருந்து கொடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான துண்டுப்பிரசுரங்கள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் (யுனிசெவ்) வெளியிடப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்கள்,மகப்பேற்று நிலையங்கள், சனசமூக நிலையங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் இவை ஒட்டப்பட்டுள்ளன.

இன்றும் நாளையும் மற்றும் டிசெம்பர் 1 ஆம் 2 ஆம் திகதிகளிலும் நாட்டிலுள்ள அனைத்து 5 வயதுக்குட்பட்ட

ஞர்களுக்கு ஸ்ரீலங்கா அரசின் சன்மானம் இதுதான் என்பதை இனிமேலாவது சர்வதேச நாடுகள் அதிலும் குறிப்பாக அகதி அந்தஸ்த்து கோரி தஞ்சம் புகுந்த தமிழ் இளைஞர்களை நாடு கடத்தும் நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

கொலைச் சம்பவங்கள் நடந்தவுடன் விளக்கமென்றும், விசாரணையென்றும், விசேட ஆணைக்குழுவென்றும் அரசு காட்டும் ஆலாவர்ணமெல்லாம் வெறும் போலி என்பது நமக்கு காலம் உணர்த்தியபாடம்.

இத்தகைய செயல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கமும், சிங்கள மக்களும் முன் வரவேண்டும்.

தமிழ் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். இல்லாவிடில் தென்னிலங்கையிலும் பதிலடி குண்டுகள் வெடிக்கலாம் அதனால் சிங்கள மக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் தவிர்க்க முடியாததாகிவிடும்.

4) குறைவான ஆசிரியர் பயிற்சியும், தொழில் நுட்பமும்.

இலங்கையில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி நகர்ப்புறச் செல்வாக்குடைய பாடசாலைகளையும் சூழல்களையும் நோக்கியே வழிப்படுத்துகின்றன எனலாம்.

இவ்வாசிரியர்களும் அதிபர்களும் வசதியற்ற சூழல்களில் வாழும் மக்களின் சமூகவியல், உளவியல் அமைப்பை கிரகித்துக்கொள்ளவும் முடியாதிருக்கின்றனர்.

5) ஆசிரியர் பற்றாக்குறை.
6) பௌதீக வளங்களின் குறைவு.

7) மாணவரின் வளமற்ற குறைவான ஊக்குவிக்கும் சமூகச் சூழல்.

8) குறைவரவு.

இது நோய், குடும்பவருமானத்திற்கு பிள்ளைகளின் பங்களிப்பு என்பவற்றினால் ஏற்படுகிறது.

9) பெற்றோரின் விருப்பு குறைவான பங்களிப்பு.

போன்ற இன்னோரன்ன காரணிகளின் தாக்கம் இடை

## தம்பியப்பா காங்கேசபிள்ளை

B. Sc, Dip-In-Edu, M. Phil (Edu.)
விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை

வான கல்வித்திட்டம் தேவையான தொன்றாகும். போர்க் கொடுமைகளை நேரில் பார்த்த பிள்ளைகள் அதிர்ச்சிக்குள்ளாக்கப்படுவதுடன் பொருள்இழப்பு, பெற்றோர், உற்றார் உறவினர் இழப்பு, வீடுவாசல் இழப்பு, இடப்பெயர்வு, அகதிநிலை, அகதி வாழ்வு ஆகியனவும் பிள்ளைகளின் உளநிலையைப் பாதிக்கின்றன.

சிறுவர்களின் கல்வியானது பல நாட்கள் தடைப்படின் அதுநிரந்தரமாகக் கல்வியைக் கைவிடும் நிலைக்கு இட்டுச் சென்று விடும் என்பது கல்வியலாளர்களின் கருத்தாகும். ஐ. நா சிறுவர் உரிமை சாசனத்தில்வலியுறுத்தப்பட்டதற்கமைய சிறுவர்களுக்கு உயிர் வாழும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, குடும்பத்தினரோடு இணைந்து வாழும் உரிமை என்பன உரித்தானவையாகும்.

இதன் படி போரினால் ஏற்படும் இடப்பெயர்வினால் சிறுவர்களின் இவ்வுரிமைகள் உள்ளங்களைவாட்டுகின்றன. உண்மையில் யுத்த சூழலற்ற பிரதேசங்களுக்கு இத்தாக்கம் புரியாது இருப்பதாலும் யுத்தப் பிரதேசங்களில் உள்ள சணிசமானோர் இக்கொடிய சம்பவங்களை நேரில் கண்டு உளம் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதன் காரணமாக சிறுவர் கல்வியைக்கைவிட்டு பிறழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் சாத்தியக் கூறும் அதிகரிக்கின்றது இந் நிலை எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது மிகையாகாது.

இலங்கையில் வடக்குகிழக்கு யுத்தம் 10 இலட்சத்திற்கு குறையாதசிறுவர்களைநேரடியாகப் பாதித்துள்ளது என அறிக்கைகள் கூறுகின்றன. இவற்றுள் வடக்கு- கிழக்கு மாவட்டங்களிலும், வெளி மாவட்டங்களிலும், தமிழ் நாட்டிலும் இடம் பெயர்ந்த குடும்பங்களில் ஏறத்தாழ 4 இலட்சம் பேர் சிறுவர்கள் எனவும், இதில் $2\frac{1}{2}$ இலட்சம் வரை

இன்றும் நாளையும் மற்றும் டிசெம்பர் 1 ஆம் 2 ஆம் திகதிகளிலும் நாட்டிலுள்ள அனைத்து 5 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(உ-106)

## செய்தியாளருக்கு தடை

(கொழும்பு)

அஸ்கிரிய பீடத்திற்குள் செல்வதற்கு செய்தியாளர்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளும் விசேட பிரமுகர்களும் கண்டி அஸ்கிரிய பௌத்த பீடத்தின் மகாநாயக்கரைச் சந்திக்கச் செல்லும் போது ஊடகவியலாளர்கள்இனி அனுமதிக்கப்படமாட்டார்கள். (செ)

## கந்தசஷ்டி விரதம்

(அரியாலை)

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை கந்தசஷ்டி விரதம் ஆரம்பமகின்றது.

தினமும் காலை 10.00 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 4.15 மணிக்கு சண்முக அர்ச்சனையும் இடம் பெறவுள்ளது.
(செ-106)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை பொதுமக்கள் தகவல்தரவும் பொலிஸார் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை இரவு 10-00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை தொடர்பாக தகவல் தெரிந்தோர் பின்வரும்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பொலிஸார் தெரிவித்து ளனர்.

தொலைபேசி இலக்கம் 021-2221 அல்லது 021-2222 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தை நேரில் கண்டோர் மற்றும் இதுதொடர்பான தகவல் தெரிந்தோர் தயக்கம் ஏதுமின்றி மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

---

**வீதி ...**

நிலையில் உள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இணுவில், உரும்பிராய், ஊரெழு, பெருமாள் கோவில் பகுதிகளிலேயே இவ் வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணுவில் பகுதியில் இடம்பெற்றவிபத்தில்மீசாலையைச் சேர்ந்த பரஞ்சோதிஞானாம்பிகை (வயது 71) உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பொன்னையா. சசிக்குமார் (வயது 23) ஊரெழுவைச் சேர்ந்த நவீ மேகலா (வயது 10) ஆகியோரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டவர்களாவர். (வ-12)

---

**பண்டாரவளை,,,,**

வெளிக்காட்டி நிற்கின்றது.

இவ்வாறு பண்டாரவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படுகொலையை கண்டிக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 கறுப்பு யூலையில் வெலிக்கடையில் அப்பாவித் தமிழ் இளைஞர்களை ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யக் காரணமாயிருந்த ஐ.தே.கட்சியின் பேரினவாதச் சிந்தனைகளையும் மீறி பல நூறு மடங்காக சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் பேரினவாதம் பூதாகாரமாக உருவெடுத்து நிற்கிறது. இப்படுகொலைகளை மீண்டுமொருமுறை அனுமதிக்கக் கூடதென அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ந-4)

---

**படு,,,,...**

சேரி நகரசபைத் தலைவர் பெ.தனபாலசிங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசின் பாதுகாப்பில் இருக்கும் இளைஞர் களுக்கே இந்நிலையென்றால்ஏனையஇடங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு எப்படி இவ் வரசாங்கம் பாதுகாப்பு வழங்கப்போகிறது.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக காலத்திற்கு காலம் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமிழ்தலைமைகளின் கோரிக்கைகளுக்கு இணங்க பல விசாரணைக் குழுக்களை அமைத்தாலும் அவற்றால் எவ்விதபயனும் கிடைக்கவில்லை எனவே இவ்வாறான இன அழிப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இருக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அந்த அறிக்கையில் மேலும்கேட்கப்பட்டுள்ளது (ந-4)

---

**அவசர,.**

'மட்டக்களப்பு.
- பெருமாள் கனேஷ்வரன் 'மட்டக்களப்பு.
- கந்தசாமி ஸ்ரீதரன் 'மட்டக்களப்பு.
- தம்பிப்பிள்ளைசசிக்குமார் 'அச்சுவேலி.
- சின்னத்தம்பி சுதாகரன் 'திருகோணமலை.
- முனுசாமி விஜயகும்ார் 'மஸ்கெலியா.
- தங்கராஜா உத்தமநாதன் 'வவுனியா.
- நிக்லஸ் எட்வின் 'திருகோணமலை.
- சின்னத்தம்பி ராஜசுதன் 'செட்டிக்குளம்.

---

**யாழ் நகர,,,,**

பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இத்தினதில் அனைவரும் ஒ றிணைவோமென ஈ.பி.டி.பி அமைப்பு மேலும் கோரியுள்ளது.

---

# மருத்துவ சிகிச்சை

சுன்னாகம் தெற்கு சபாபதி பிள்ளை வீதியிலுள்ள சிறுவர் பாலர் பாடசாலையில் அண்மையில் மருத்துவ குழுவினரால் சிகிச்சை நடாத்தப்பட்டது.

இச் சிகிச்சையில் 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் நிறைகள் சுகாதாரநிலமைகள் ஆராயப்பட்டு அறிக்கைகளும் வழங்கப்பட்டன.

---

**பண்டாரவளையில்..**

வதை அடுத்து முதலமைச்சர் சமரவீர வீரவன்னி அப்பகுதி மாகாண அமைச்சர்கள் படை அதிகாரிகள் மற்றும் செயலாளர்களுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாநாட்டில் பண்டாரவளைப்பகுதியில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் பொலிஸாரும், இரர்ணுவத்தினரும் 24 மணிநேர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை பண்டாரவளைச் சம்பவத்தின் எதிர் ஒலியாக கொழும்பு நகரில் எந்த நேரமும் குண்டுவெடிக்கலாம் என்ற அச்சம் காரணமாக முன் எப்போதும் இல்லாதவாறு அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக ஐம்பது தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் 18 பேர் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். என்றும்தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ் சேனை ஆகிய பகுதிகளை சேர்ந்த தமிழ் இளைஞர்களே இவ்வாறுபொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை பிந்துலோயப் பகுதியில் இக்கோர கொலைச்சம்பவம் இடம்பெற்றதை அடுத்து அப்பகுதி தற்போது இராணுவத்தினரின் முழுமையன கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

**சக்திவாய்ந்த,,,**

50 கிலோமீற்றர் தூரத்தில் பெட்டியொன்றில் மேற்படி குண்டுகள் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றும் இத்தினத்தில் தீவைத்தெரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் நடத்தி வருவ

---

# சிம்பாவே அணியை இந்தியா வென்றது!

(கொழும்பு)

இந்தியா, சிம்பாவே அணிகளுக்கிடையே சாஜாவில் நேற்று நடைபெற்ற 'சாஜா கிண்ண முக்கோண' கிரிக்கெற் போட்டித் தொடரின் 2 ஆவது சுற்றுப் போட்டியில் இந்திய அணி சிம்பாவே அணியை 3 விக்கற்றுக்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி மட்டுபடுத்தப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில்9 விக்கற்றுக்களை இழந்து218 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இப் போட்டியில் மிகஅவத்தானத்துடன் இராண்டாவதாகக் களமிறங்கிய இந்திய அணி 48.3 ஓவர்கள் நிறைவில் 7விக்கெற்றுக்களை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது

இன்றைய ஆட்டத்தில் இந்தியா, இலங்கை அணிகள் மோதவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

---

# சர்வதேச இந்து மத குருபீடம் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

எமது வேண்டுகோளை ஏற்று இந்து சமய கலாச்சார அலுவல்களுக்கு தனியான அமைச்சகமொன்றை ஏற்படுத்தி அதனை வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கியமைக்காக ஜனாதிபதிக்கு சர்வதேச இந்துமத குருபீடஸ்தாபனத் தலைவரும் சபரிமலை ஸ்ரீ ஸாஸ்தா பீடாதிபதியுமான கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பௌத்த முஸ்லிம் அலுவல்களுக்கு தனியான அமைச்சுக்கள் அமைக்கப்பட்டது போல இந்துசமய கலாச்சார அலுவல்களுக்குதனி அமைச்சு வேண்டுமென ஜனாதிபதியிடமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் கோரிக்கை விட்டிருந்தோம். அந்தக் கோரிக்கை இன்று நிறைவேற்றப் பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

---

# யாழ். மாவட்டத்தில் உச்சவிலையில்பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கொழும்பு விலையிலும் இரண்டு மடங்கு விலையாக கூட்டி விற்கப்படுவதாக யாழ். மாவட்ட நுகர்வோர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் அதிகலாபம் ஈட்டுவதில் இலக்காகக் கொண்ட செயற்படுகின்றனர் இவ்விடயத்தில் விலைக்கட்டுப்பாட்டு திணைக்கள அதிகார்ரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும். வரிகள் அறவிடப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் கப்பல் கட்டணம், காப்புறுதிக் கட்டணம் பொருட்கள் சேவைகள் வரி, பாதுகாப்பு வரி என்பனவற்றின் காரணமாகவே பொருட்களை விலை கூடுதலாக வீற்கப்படுமென வர்த்தகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
விஜயகாந், ராதிகா
நடித்த
பூந்தோட்ட
காவல் காரன்
10-30, 2.30 (ப. நேரம்)
(கி-688)

- நிக்லஸ் எட்வின் 'திருகோணமலை.
- சின்னத்தம்பி ராஜசுதன் 'செட்டிக்குளம்.
- புவனேந்திரன் ரூபன் 'அம்பாறை.
- கந்தசாமி சந்திரசேகரன் 'வவுனியா.

## வைத்தியசாலை.,

- சுந்தரலிங்கம் சிவசங்கர் (திருகோணமலை)
- கனகேஸ்வரன் பிரபாகரன் (திருகோணமலை)
- புஸ்பராசா சாண்டீபன் (திருகோணமலை)
- கோகுலமணி சஜீவன் (மட்டக்களப்பு)
- பேரின்பநாயகம் நிமல்ராஜ் (மட்டக்களப்பு)
- சோமசுந்தரம் செல்வராஜா [மட்டக்களப்பு]
- க. சிவகுபேந்திரன் (ஆரையம்பதி)
- மயில்வாகனம் கனகலிங்கம் (வாழைச்சேனை)
- விக்னேஸ்வரன் ஜெயக்காந்தன் (அம்பாறை)
- அமரலிங்கம் அமரதீபன் [அக்கரைப்பற்று]
- சந்தனம் செல்வராஜா (கொட்டகல)

ஒ றிணைவோமென ஈ.பி.டி.பி அமைப்பு மேலும் கோரியுள்ளது.

## 13 சடலங்கள்..

மாறு.

- மாரிமுத்து பாலகுமாரன் (மட்டக்களப்பு)
- புண்ணியமூர்த்தி மதியழகன் [திருகோணமலை]
- செல்வராஜா துரைராஜா (வல்வெட்டித்துறை)
- சிவயோகராசா விபுலானந்தராசா (அம்பாறை)
- திருச்சிற்றம்பலம் முகுந்தன் (யாழ்ப்பாணம்
- குணபாலம் ஜெயவர்த்தனம் (மன்னார்)
- அன்ரனி ஜோண் (மட்டக்களப்பு)
- இராமசாமி கருணாகரன் (வவுனியா)
- விஸ்வலிங்கம் ரூபேஸ்குமார் (வவுனியா)
- விாயகமூர்த்தி (மட்நடக்களப்பு)
- சின்னத்துரை மோகன் [திருகோணமலை]
- கணபதிப்பிள்ளை ரவீந்திரன் [வெலிகந்த]
- விஸ்வலிங்கம் விஜயசுந்தரம் [கரவெட்டி]

கூறப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## தமிழ்,,,

பாதிப்பைஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஈ.பி.டிபியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமைதியையும், சமாதானத்தையும் நிலை நாட்டி தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் விமோசனம் கிடைக்க வழி செய்யும் சக்திகளுக்கு தேசிய அரசியல் கிட்டி வருகின்ற அந்தஸ்துக்களை சகித்துக் கொள்ள முடியாத பேரினவாதிகளின் வெறித்தனமான தூண்டுதல்கள் இச்சம்பவத்தின்பின்னணியில் இருக்கிறது.

இக் கொடூரச் செயலில் பாதிப்படைந்த அனைவருக்கும் நியாயமான உரிய இழப்பீடுகள் வழங்குமாறு நாட்டின் எப்பாகத்திலும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இக்கண்டன அறிக்கையில் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(ந-4)

10-30,2.30 (ப. நேரம்)
(கி-688)

லாக விற்கப்படுமென வர்த்தகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## ஈ.பி.டி.பி யின்
# வேண்டுகோள்

## நாளை சனிக்கிழமை யாழ் குடா முழுவதும் துக்கம் அனுஷ்டிப்பு!

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நாளை (28-10-2000) சனிக்கிழமை யாழ். குடாநாடு முழுவதும் பூரண துக்கம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இதற்கு வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், பொது, அரச அமைப்புக்கள் தமது ஸ்தாபனங்களை மூடியும், தனியார் போக்குவரத்து சேவையாளர்கள் போக்குவரத்து சேவையினை இடை நிறுத்தியும் ஆதரவு வழங்குமாறும் வேண்டுகிறோம்.**

**ஈழ மக்கள் ஜனநாயக கட்சி**
**(யாழ்மாவட்டம்)**

(கி-979)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.